பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 393

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றம்

(முதலாம் கூட்டத் தொடர்)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஏழாவது அறிக்கை

(மஹபொல நம்பிக்கை நிதியம் தொடர்பாக 2025.07.09 ஆம் திகதி நடத்தப்பட்ட விசாரணை)

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
பாராளுமன்ற உறுப்பினர்

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர அவர்களால் 2025 திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

2025 திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தால் அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் உறுப்பினர்கள்
பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர்

1. கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா,உ., (தவிசாளர்)

2. கௌரவ அர்கம் இல்யாஸ், பா.உ., (2025.05.08 ஆம் திகதி முதல்)

3. கௌரவ மனோ கணேஷன், பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

4. கௌரவ (சட்டத்தரணி) தயாசிறி ஜயசேகர, பா.உ., (2025.05.20 ஆம் திகதி முதல்)

5. கௌரவ (சட்டத்தரணி) அர்ஜுன சுஜீவ சேனசிங்க, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

6. கௌரவ டி.வீ.சானக்க, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

7. கௌரவ (சட்டத்தரணி) அநுராத ஜயரத்ன, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

8. கௌரவ நலீன் பண்டார ஜயமஹ, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

9. கௌரவ எஸ்.எம். மரிக்கார், பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

10. கௌரவ முஜிபுர் ரஹுமான், பா.உ., (2025.05.20 ஆம் திகதி முதல்)

11. கௌரவ சமிந்த விஜேசிறி. பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

12. கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ., (2025.05.08 ஆம் திகதி முதல்)

13. கௌரவ எம்.கே.எம். அஸ்லம், பா.உ.,

14. கௌரவ (சட்டத்தரணி) நிலந்தி கொட்டஹச்சி, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

15. கௌரவ சமன்மலீ குணசிங்க, பா.உ.,

16. கௌரவ திலித் ஜயவீர, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

17. கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், பா.உ., (2025.05.08 ஆம் திகதி முதல்)

18. கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.,

19. கௌரவ சுதத் பலகல்ல, பா.உ.,

20. கௌரவ (டாக்டர்) எஸ்.ஸ்ரீ. பவானந்தராஜா, பா.உ.,

21. லெப்டினன் கமாண்டர் (ஓய்வு) பிரகீத் மதுரங்க, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

22. கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ.,

23. கௌரவ ருவன் மாபலகம. பா.உ.,

24. கௌரவ சுனில் ரா ஜ பக்ஷ, பா.உ.,

25. கௌரவ தர்மபிறிய விஜேசிங்க, பா.உ.,

26. கௌரவ அசித நிரோஷண எகொடவித்தான, பா.உ.,

27. கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்யலிங்கம், பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்)

28. கௌரவ திலின சமரகோன், பா.உ.,

29. கௌரவ சந்திம ஹெட்டியாரச்சி, பா.உ.,

30. கௌரவ (சட்டத்தரணி) செல்வி லக்மாலி ஹேமசந்திர, பா.உ.,

31. கௌரவ தினேஷ் ஹேமந்த, பா.உ., (2025.03.21 ஆம் திகதி முதல்

குழுச் செயலகத்தின் பணியாட்டொகுதி

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தற்போதைய பணியாட்டொகுதி பின்வருமாறாகும்.

- உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) -செல்வி ஹிமாலி சமரதிவாகர
- பிரதம உத்தியோகத்தர் - திருமதி. எச்.ரூபானி த சொய்சா
- பிரதிப் பிரதம உத்தியோகத்தர் - திரு.எஸ்.எல். விக்ரம
- பாராளுமன்ற உத்தியோகத்தர் - திருமதி.ஜி.வி.எஸ்.கே.குமாரி
- பாராளுமன்ற உத்தியோகத்தர் - திருமதி.ஐ.எஸ்.கோமஸ்
- பாராளுமன்ற உத்தியோகத்தர் - திருமதி.ஜி.எல்.டி.பெர்னாந்து

குழு அறிக்கைகள்

www.parliament.lk எனும் இணையத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பின்பற்றி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

www.parliament.lk

↓

தமிழ்

↓

பாராளுமன்ற நடவடிக்கைகள்

↓

குழுக்கள்

↓

குழு அறிக்கைகள்

உள்ளடக்கம்

		பக்க இலக்கம்
1.	தவிசாளரின் குறிப்பு	V
2.	நிறைவேற்று பொழிப்பு	VII
3.	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஏழாவது அறிக்கை	IX
4.	நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்	01
5.	அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் விசாரணை செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் - மஹபொல நம்பிக்கை நிதியம்	02

தவிசாளரின் குறிப்பு

பாராளுமன்றத்தின் சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்களின் கீழ் நிறுவப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு 2025.07.09 ஆம் திகதி விசாரணை செய்த வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் அதன் தற்போதைய செயல்திறன் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையை இதனுடன் நான் சமர்ப்பிக்கிறேன்.

மேற்படி நம்பிக்கை நிதியம், 1981ஆம் ஆண்டு 66ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளதோடு, 2022ஆம் ஆண்டு 1ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய (திருத்தச்) சட்டத்தின் மூலம், அதன் பெயர் லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் என திருத்தப்பட்டுள்ளது. இந்நிதியத்தின் பணி, நோக்கு, இலக்குகள் மற்றும் நோக்கங்கள் குறித்து குழு கவனம் செலுத்தியது.

இலங்கையில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்காக நிதியுதவி வழங்கும் முன்னணி அரசு நிறுவனமான மஹபொல நம்பிக்கை நிதியத்தின் மூலம் அதன் இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் அதன் பிரதான நோக்கம் எந்த அளவிற்கு அடையப்பட்டுள்ளது என்பது குறித்து இங்கு விசாரிக்கப்பட்டது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகப் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியம்

மற்றும் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்களை முறையாக நடத்துவது குறித்து குழு விசேட கவனம் செலுத்தியதோடு அதற்குறிய பரிந்துரைகளையும் வழங்கியது. நம்பிக்கை நிதியத்தின் துணை நிறுவனங்களான நேஷனல் வெல்த் கார்ப்பரேஷன் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனமான நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் கம்பனி ஆகியவை நஷ்டமடைந்தது தொடர்பிலும் மஹபொல நம்பிக்கை

நிதியத்தின் நிதியை முதலீடு செய்து நிறுவப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை (SLIIT) மஹபொல நம்பிக்கை நிதியத்தின் கீழ் மீண்டும் கையகப்படுத்துவது தொடர்பான பரிந்துரைகளும் இவ்வறிக்கையில் உள்ளடக்கியுள்ளது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விசாரணைகளிலிருந்து நாட்டிற்கு கிடைக்க வேண்டிய அதிகப்பட்ச சேவை, இக்குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து மீளாய்வு செய்து, அனைத்துப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரின் கவனத்தைப் பெற்று மற்றும் அவற்றை செயல்படுத்துதல் வரை கொண்டுவருவதன் மூலமாகவே முழுமை பெறுகிறது. நாட்டின் இறையாண்மை கொண்ட மக்களின் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளாக இந்த மீயுயர் சபையின் பணியை முறையாகத் தொடரும் அதே வேளையில், இங்கு வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயல்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க முடியுமான முயற்சிகளை மேற்கொள்வதற்கும், மிகத் திறம்பட அவற்றை செயல்படுத்தவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக குழுவின்

உறுப்பினர்களாகிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும், சபாநாயகர் தலைமையில் பாராளுமன்ற அலுவலர்கள் மற்றும் குழுவின் இரண்டு ஆலோசகர்களிடமிருந்தும் கிடைக்கும் ஒத்துழைப்பையும், திறைசேரி அலுவலர்கள் மற்றும் குறிப்பாக பதில் கணக்காய்வாளர் நாயகத்தின் தலைமையில் தேசிய கணக்காயவு அலுவலகத்திலிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர, பா.உ.

தவிசாளர்

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு

<u>நிறைவேற்றுப் பொழிப்பு</u>

2025.07.09ஆம் திகதி பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மஹபொல நம்பிக்கை நிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளையும் அதன் தற்போதைய செயல்திறனையும் பரிசோதித்தது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தை நிறுவுதல், நிதியத்தின் அமைப்பு, நம்பிக்கை பொறுப்புச் சபையின் கூட்டங்களை நடத்துதல், நிறுவனத் திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம், நிறுவனத்தின் பணியாட்டொகுதியினர் ஆகிய நிறுவனத்துடன் தொடர்புடைய பொதுவான விடயங்களும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணை நிறுவனங்களான நேஷனல் வெல்த் கார்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனமான நாட்வெல்த் செக்யூரிட்டீஸ் லிமிடெட் ஆகியவை நட்டமடைந்தமை தொடர்பான பல முக்கியமான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

மஹபொல நம்பிக்கை நிதியத்தில் நிறைவேற்று தரங்களின் பதவிகளிலுள்ள வெற்றிடங்களை அவசரமாக நிரப்புவது குறித்து கவனம் செலுத்தப்பட்டதோடு நம்பிக்கை பொறுப்புச் சபையின் கூட்டங்களை முறையாக நடத்தி, முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிதி மற்றும் நிலத்தைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLITT), படிப்படியாக மஹபொல நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து பிரிந்து தனியார் நிறுவனமொன்றாக செயல்பட்டு வருவதாகவும், 2015.05.12 ஆம்

திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, மஹபொல நம்பிக்கை நிதியத்தின் உரிமைகள் மற்றும் பயன்கள் பற்றிய விடயங்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி, மஹபொல

நம்பிக்கை நிதியத்துடனான தொடர்புகளும் நீக்கப்பட்டுள்ளதாக குழு சுட்டிக்காட்டியது.

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (SLITT) உரிமையை மீண்டும் மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு பெறத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவம் குறித்து இங்கு வலியுறுத்தப்பட்டது.

மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மூலம் உயர்கல்வி கற்கின்ற புலமைப்பரிசில் பெற தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல உதவித்தொகை வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும்போது இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இக்கலந்துரையாடலின் போது வழங்கப்பட்ட பல முக்கியமான பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளடங்கியுள்ளது.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஏழாவது அறிக்கை

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஏழாவது அறிக்கையை மிக்க மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றது.

அனைத்து அரச கூட்டுத்தாபனங்களும், ஏதேனும் எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு கையகப்படுத்தப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் பிற வணிகங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் தனது பங்குகளில் ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு அரசாங்கமோ, அரச கூட்டுத்தாபனமோ அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றோ வைத்திருக்கும் நிறுவனங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் கணக்குகள் மற்றும் நடப்பு செயலாற்றுகையை கணக்காய்வாளர் நாயகத்தின் உதவியுடன் ஆராய்வது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

தற்போது அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மேற்பார்வையின் கீழ் வரும், அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம் மற்றும் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கீழ் ஒழுங்குறுத்தப்படும் 462 அரச தொழில் முயற்சிகள் உள்ளன. (ஆதாரம்; அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் - 2025.09.04 ஆம் திகதி)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் (முதல் 11 மாதங்களுக்குள்) கீழ்காணும் படி குழுக் கூட்டங்களை நடத்தியுள்ளது.

தொடரிலக்கம்	**அழைக்கப்பட்ட நிறுவனம்**	**குழுக் கூட்டம் நடத்தப்பட்டத் திகதி**
1.	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	2025.02.18
2.	தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	2025.02.20
3.	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	2025.02.27
4.	தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை	2025.03.05
5.	தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை	2025.03.12
6.	தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை	2025.03.27
7.	விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (தனியார்) நிறுவனம்	2025.04.02
8.	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	2025.05.08
9.	விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (தனியார்) நிறுவனம்	2025.05.09
10.	ஶ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை	2025.05.15
11.	இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்	2025.05.23
12.	இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்	2025.06.04
13.	ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகம்	2025.06.20
14.	மஹபொல நம்பிக்கை நிதியம்	2025.07.09
15.	காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	2025.07.17
16.	அரச மரக் கூட்டுத்தாபனம்	2025.07.23

17.	சிவில் விமான சேவைகள் அதிகாரசபை	2025.08.20
18.	இலங்கை துறைமுக அதிகாரசபை	2025.09.10
19.	புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்	2025.09.12
20.	இலங்கை மின்சார சபை	2025.09.24
21.	நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை	2025.10.08
22.	லங்கா சதொச லிமிடட்	2025.10.10
23.	இலங்கை மின்சார சபையின் விசாரணையுடன் தொடர்புடையதாக எல்.ரீ.எல். ஹோல்டிங்க்ஸ் நிறுவனமும் அதன் துணை நிறுவனங்களும்	2025.10.24
24.	தேசிய சேமிப்பு வங்கி	2025.11.19
25.	தேசிய சேமிப்பு வங்கி	2025.11.26

இதில், 2025.07.09ஆம் திகதி அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் மூலம் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்புக்குள் வரும் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள், சிறப்பு கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை ஆராயப்பட்டு, குழுவின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்காக சமர்ப்பித்துள்ள நிதி கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயம் பின்வருமாறு.

நிறுவனம்	ஆண்டு	
	2022	2023
மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	முனைப்பழியுள்ள அபிப்பிராயம்	மறுப்பு அபிப்பிராயம்

கணக்காய்வு அபிப்பிராய வகைகள்

01. **முனைப்பழியற்ற அபிப்பிராயம்** (Unqualified Opinion)
நிதியறிக்கையில் நிறுவனத்தின் நிதி நிலைமை நியாயமாக முன்வைக்கப்பட்டுள்ளமை

02. **முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (Qualified Opinion)**
அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப மெய்யாகவும், நியாயமாகவும் பிரதிபலிக்கின்றமை

03. <u>மறுப்பு அபிப்பிராயம் (Disclaimer of Opinion)</u>

போதுமான அல்லது பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை இனங்காண முடியாததால் கணக்குகள் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவிக்க முடியாமை

04. <u>எதிர்மறை அபிப்பிராயம் (Adverse Opinion)</u>

நிறுவனத்தின் நிதி நிலைமை, நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குட்பட்டு மெய்யாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றமை

மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு)

விசாரணை மேற்கொள்ளப்பட்டத் திகதி- 2025.07.09

1. நிறுவனம் தொடர்பான பொதுவான விடயங்கள்

1.1. நிதியத்தை நிறுவுதல்

1981 ஆம் ஆண்டின் 66ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பெயர், 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டத்தின் மூலம் லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எனத் திருத்தப்பட்டுள்ளது. மேற்படி நிதியத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் குறித்து குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

1.2. நிதியத்தின் அமைப்பு

நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை, நிறுவனர் அல்லது அவரது நியமனதாரர் மூலம், ஜனாதிபதியால் மூன்று வருட காலத்திற்கு நியமிக்கப்படும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் அல்லது ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்தலைமையதிபதியாகிய தவிசாளரொருவரிடமிருந்து, உயர் கல்விக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளராக, கல்விக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளராக மற்றும் வர்த்தகத்திற்குப்

பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளராக தற்காலத்தில் பதவியில் இருப்பவர்கள் மற்றும் நிறுவனரால் ஐந்து வருட காலத்திற்கு நியமிக்கப்படும் இரு நபர்களும் இதில் உள்ளடங்குவர்.

கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய இரு விடயங்களிலும் செயலாளராக (பிரதான கணக்கீட்டு அலுவலர்) ஒரு அலுவலர் செயல்படும் சில சந்தர்ப்பங்களில், நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்களின் கூட்ட நடப்பெண்ணை (4) பேணுவதில் நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன.

1.3. நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்கள்

2000ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் வரை நடத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்கள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு;

ஆண்டு	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	ஆண்டு	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை
2000	2	2013	-
2001	1	2014	-
2002	2	2015	5
2003	2	2016	4
2004	4	2017	3
2005	2	2018	5
		2019	5
2006	-		
2007	1	2020	6
2008	2	2021	8
2009	1	2022	4
2010	1	2023	4

2011	1	2024	6
2012	2	2025 ஏப்பிறல் 30 வரை	3

நம்பிக்கைப் பொறுப்புச் சபைக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்படவில்லையென்பதோடு, சில ஆண்டுகளில் அக்கூட்டங்கள் நடத்தப்படவே இல்லை.

தற்போது, மாதத்திற்கு ஒரு நம்பிக்கை பொறுப்புச் சபைக் கூட்டத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திறைசேரியிலிருந்து பெறப்படும் நிதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் நிதியத்திற்கு கிடைப்பதால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிதியத்தின் நம்பிக்கை பொறுப்புச் சபை உறுப்பினராக (நியமிக்கப்பட்ட பொறுப்பாளராக) செயற்படுவார்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பாரிய நிதி சுழற்சியுடைய ஒரு நிதியம் என்பதாலும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அது சிறந்த சேவையை வழங்குவதாலும், வரலாற்றில் நிகழ்ந்த சில பாரதூரமான சம்பவங்கள் குறித்து தொடர் கலந்துரையாடல்கள் அவசியம் என்பதாலும், நம்பிக்கை பொறுப்புச் சபைக் கூட்டங்களை மாதாந்தம் நடத்துவது மிக முக்கியமென நிறுவன நம்பிக்கைப் பொறுப்பாளரான வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சர் குழுக் கூட்டத்தின்போது வலியுறுத்தினார்.

<u>விதப்புரை</u>

i. நம்பிக்கை பொறுப்புச் சபைக் கூட்டங்களை நடத்துவது தொடர்பான பொருத்தமான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல்.

1.3.1 <u>அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபைக்கு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிரதிநிதித்துவம்</u>

அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைக்கும் இலாபம் ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதாலும், அதன் பங்குகளில் 50% மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கொண்டிருப்பதாலும், நிதியத்தின் ஒரு உறுப்பினர் அபிவிருத்தி லொத்தர் சபையின்

பணிப்பாளர் சபைக்குள் இருப்பதாகவும் குழுக் கூட்டத்தின்போது தெரிய வந்தது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபம் ஜனாதிபதி நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதாகவும், அதில் 50% நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்கப்படுவதாகவும் மேலும் தெரிய வந்தது.

1.4 <u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்</u>

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒன்றேனும் நடாத்த வேண்டும். எனினும்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் ஒன்று என்ற வகையில் நடாத்தப்பட்டிருந்ததோடு, 2024ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே, புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டிற்காக இது வரையில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டமேனும் நடாத்தப்படவில்லை. மேலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்கு கல்வி அமைச்சின் செயலாளர் தலைமை வகிக்கின்றார்.

<u>விதப்புரைகள்</u>

I. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயலூக்கப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
II. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைமைத்துவப் பதவி அத்தியாவசியமான தகைமையான நபரால் வகிக்கப்படுவதை உறுதிசெய்தல். (உதா:- கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர்)

1.5 இணைந்த திட்டம் மற்றும் மூலோபாயத் திட்டம்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் 2024-2026 ஆண்டுகளுக்கான இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அது 2025 ஆம் ஆண்டிற்காக புதுப்பிக்கப்படவில்லை.

இங்கு மூலோபாயத் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் நிறுவனத்தின் இலக்குகள், நோக்கங்கள் மற்றும் நிறுவனத்தின் தற்போதைய நிலைமையுடன் இணையாக வேண்டிய தேவையையும், மூலோபாயத் திட்டம் வருடாந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் அதன் பகுதியாக வருடாந்த திட்டமிடல்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும் குழு வலியுறுத்தியதோடு, புதுப்பிக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்காக செலவிடப்படும் காலம் பற்றியும் குழு வினவியது.

பணியாட்டொகுதியின் அத்தியாவசியமான பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகவும், நிறுவனத்தில் இருக்கும் ஒரே

நிறைவேற்று உத்தியோகத்தர் நிதியத்தின் தலைவர் என்றும், நிறுவனத்தில் பணிப்பாளர், கணக்காளர் மற்றும் உள்ளக கணக்காளர் ஆகிய பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடமாகக் காணப்படுவதாகவும் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

<u>விதப்புரைகள்</u>

I. தற்போதைய அரசாங்கக் கொள்கைக்கு உட்படும்வகையில் மூலோபாய திட்டத்தை புதுப்பித்தல்.

1.6 <u>பணியாட்டொகுதியின் அமைவு</u>

2024 டிசம்பர் 20 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு நம்பிக்கை நிதியத்தின் அமைவு பின்வருமாறு.

பணியாளர்கள் குழு	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை	2025 ஏப்ரல் 30 உண்மையான எண்ணிக்கை		வெற்றிடங்களின் எண்ணிக்கை
		நிலையான	பதில்	
சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம்	01	-	-	01
நடுத்தர முகாமைத்துவ மட்டம்	03	-	01	03
கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்	02*	02	-	-
முகாமைத்துவ உதவியாளர்	12	09	-	03
ஆரம்பமட்டம்	04	02	-	02
மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை	22	13	01	09

*ஒரு பதவியை வகிப்பவருக்கு தனிப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம், சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 01 வெற்றிடம், நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில் 03 பதவிகள்,

முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகள் 03 மற்றும் ஆரம்ப ஊழியர்கள் மட்டத்தில் 02 பதவிகள் உள்ளடங்கலாக மொத்த ஊழியர் வெற்றிடங்கள் 09 ஆக இருந்தது.

விதப்புரைகள்

I. மஹபொல நம்பிக்கை நிதியத்தின் பணிகளை முறையாகப் பேணிச்செல்வதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தலை அடிப்படையான முன்னுரிமையாகக் கருதி அந்த நடவடிக்கைகளை உடனடியாக முடிவுறுத்தல்.

1.7 உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்படல்

2022 ஏப்ரல் 04 ஆந் திகதி நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர், 2023 யூலை 30 ஆந் திகதி பதவி விலகிய பின்னர், 2023 ஒக்டோபர் 10 ஆந் திகதி வணிகத் திணைக்களத்தின் கணக்காளர், பதில் கடமையாற்றும் அடிப்படையில் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தாலும் அந்த உத்தியோகத்தரும் 2024 ஏப்ரல் 30 ஆந் திகதி பதவி விலகிய காரணத்தினால், அந்த திகதியில் இருந்து நிதியத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

உதவிப் பணிப்பாளர் (நிதி) மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஏதுவான பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் அனுமதியின்றி பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரித்தல் தொடர்பிலும் அதற்காக செலவுகளை ஏற்கும் திறன் பற்றியும் அமைச்சின் முன்னாள் செயலாளரினால் பல்வேறு விடயங்கள் விசாரிக்கப்பட்டிருந்தன.

நிறுவனத்திற்கு அத்தியாவசியமான 2 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, அமைச்சின் முன்னாள் செயலாளரால் அந்த செயற்பாடுகளை முடக்குவதற்கு முயன்றதாகக் கூறப்படும் விடயம் குறித்து குழுவில் விசாரிக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளரின் தலைமையில் நிறுவப்பட்ட குழுவின் விதப்புரைகளின் பிரகாரம் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் மேற்கொள்ள வேண்டும் என சுற்றுநிரூபமொன்று வெளியிட்டிருந்தாலும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்களை கோரும் செயன்முறையின்போது, மேற்படி குழுவின் அனுமதியைப் பெறவில்லை என்றும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் அரசாங்கம் வெளியிட்ட சுற்றுநிரூபத்திற்கு முரணாக செயற்பட்டிருத்தல் தொடர்பாக பதிலளிப்பதற்கு பொறுப்புக்கூற கட்டுப்பட்டிருப்பதனால், அது குறித்து விசாரித்ததாக அமைச்சின் முன்னாள் செயலாளர் குழுவிற்கு தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் பதவி வழியில் நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கத்தவராவதால், ஏதேனும் குறைபாடுகள் காணப்பட்டால், நம்பிக்கை பொறுப்பாளர் சபைக் கூட்டத்தில் அதனை சுட்டிக்காட்ட முடியுமாக இருந்ததமையை எடுத்துக்காட்டிய குழு, அதிலுள்ள முரண்பாடுகள் குறித்து வினவியது.

நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் அந்த பதவிக்கு நியமிக்கப்படும்போது, அக்காலத்தில் இருந்த வர்த்தக அமைச்சர் அந்த உத்தியோகத்தரை பதவியில் இருந்து நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டதாகவும், அமைச்சின் முன்னாள் செயலாளர் அந்த உத்தியோகத்தரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் குழுவில் தெரிய வந்தது.

2022ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பொறுப்பு நிதியம் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக சுயாதீன

அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அவ்வாறு இருக்கும்போது, உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடம் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டிருப்பதாக குழுவிற்கு தெரியவந்தது.

பணியாட்டொகுதியை தீர்மானிப்பதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபையிடம் அதிகாரம் காணப்பட்டாலும், ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் உட்பட குழுவின் அனுமதி தேவை என்றும், நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தீர்மானம், அமைச்சின் செயலாளர் ஊடாக பிரதமரின் செயலாளர் உட்பட குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட அனுமதி கிடைத்த பின்னர் அந்த ஆட்சேர்ப்பு செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் விளக்கமளித்தார்.

அரச நிறுவனங்களின் வினைத்திறனற்ற நிலைக்கு முதன்மையான காரணமாக அமைந்திருப்பது நிறுவனங்களில் அத்தியாவசிய பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் நிலவுதல் மற்றும் அந்த ஆட்சேர்ப்புகளை

விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை என குழு சுட்டிக் காட்டியது.

ஆட்சேர்ப்புகள் தாமதிக்கப்படுவதனால், முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெறும்போது அவரது பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கு சரியான உத்தியோகத்தர் ஒருவர் இன்மையால், நிதியத்தின் நிதியை முதலீடு செய்ய முடியாதிருந்ததோடு, அதனூடாக நிதியத்திற்கு ரூ. 500 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

முதலீடு குறித்து செயலாளருக்கு தனிப்பட்ட தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியாது என்றும், அது முதலீட்டுக் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நிதியத்தின் துணைக்கட்டுப்பாட்டு நிறுவனங்கள் தொடர்பாக தடயவியல் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு அமைச்சின் முன்னாள் செயலாளர் பணிப்பாளர் சபை பத்திரமொன்றை அனுப்பி கோரிக்கை ஒன்றை வைத்ததாகவும் தெரிய வந்தது.

<u>விதப்புரைகள்</u>

I. மஹபொல நம்பிக்கை நிதியத்தின் செயற்பாடுகளை முறையாகப் பேணிச் செல்வதற்காக தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதை முன்னுரிமையாகக் கருதி ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விரைவாக முடிவுறுத்தல்.

03. <u>2021 சனவரி 08 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம்</u>

3.1 <u>விதப்புரை இலக்கம் 10 - மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிர்வாக கம்பனிகள் நட்டமடைதல்</u>

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிர்வாக கம்பனிகளில் நெஷனல் வெல்த் கோபரேஷன் கம்பனி மற்றும் அந்த கம்பனியின் துணைக் கட்டுப்பாட்டுக் கம்பனியான நெட்வெல்த் செக்கியூரிட்டீஸ் கம்பனி நட்டமடைதல் குறித்து பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை அடையாளங் காணும் வரையிலும் இந்த கம்பனியை கலைக்காதிருப்பதற்கு பிரதம கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலர் பரிந்துரைத்திருந்தார். அது போன்றே, அது குறித்து KPMG கம்பனி தயாரித்த முழுமையான அறிக்கையை ஆராய்வதற்கும் நீதிமன்ற கட்டளைளைப் பெற்றுக் கொள்வதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டன.

<u>வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் கோபரேஷன் கம்பனி</u>

நிதியத்தின் முதலீடுகளை நிர்வகிக்கும் நோக்கில் ரூ.200 மில்லியன் (சாதாரண பங்குகள் 20, 000,007 ஆன) ஆரம்ப முதலீட்டுடன் இந்த கம்பனி 2003 மார்ச்சு 23 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. நிதியத்தினால் இந்த கம்பனியுடன் 2003 நவம்பர் 18 ஆந் திகதி ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நிதியத்திடமிருந்த ரூ. 3,160.7 மில்லியன் நிதியத்தின் இலாகாவை நிர்வகிப்பதற்காக இந்த கம்பனிக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே, இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த கம்பனி 8 தடைவைகள் leverage செய்யப்பட்டு அண்ணளவாக ரூ.800-1000 மில்லியன் நட்டம் அடைந்தது. அது தொடர்பாக தடயவியல் ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. 2025.01.25 ஆந் திகதிய விசேட கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் 2017.12.31 ஆந் திகதி ஆகும்போது, நெட் வெல்த் கோபரேஷன் கம்பனியின் முதலீடு ரூ. 985 மில்லியன் ஆகும்.

<u>நெட் வெல்த் சிக்கியூரிட்டீஸ் கம்பனி</u>

வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் கோபரேஷன் கம்பனியினால் ரூ. 200, 000, 070 ஆன (20,000,007 பங்குகள்) ஆரம்ப முதலீட்டை மேற்கொண்டு கம்பனியின் துணைக்கம்பனியாக வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் சிக்கியூரிட்டீஸ் கம்பனி 2003 யூன் மாதம் 23 ஆந் திகதி நிறுவப்பட்டது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதி ஆகும்போது, வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் கோபரேஷனினால் இந்த கம்பனியின் 117, 500,007 பங்குகள் ரூ. 117, 500,007 இற்கு முதலீடு செய்திருந்தது.

2024 ஆண்டாகும்போது, இந்த 2 கம்பனிகளுக்கும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் இருவர் மாத்திரம் இருந்திருக்கின்றனர். தற்போது இரு கம்பனிகளிலும் ஊழியர்கள் எவரும் இல்லை. அது போன்றே , ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக நெட் வெல்த் சிக்கியூரிட்டீஸ் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் 2020 திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து இரத்தாகி இருப்பதனால், பங்குச்சந்தையில் முதலீடு செய்ய முடியாது.

அமைச்சரவையினால் 2021 மார்ச்சு 02 ஆந் திகதிய அ.ப/21/0269/313/012 இலக்கமுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த இரண்டு கம்பனிகளையும் கலைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கம்பனிக்கு ரூ.200 மில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டிலும் முதலீடு

செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அண்ணளவாக ரூ.22 பில்லியன் பெறுமதியான தொகை தற்போது இந்த இரண்டு கம்பனிகளிலும் மஹபொல நிதியத்திடம் காணப்படுகின்றது.

அவ்வாறே, துணைக் கட்டுப்பாட்டு கம்பனிகள் மற்றும் அங்கு ஊழியர்களுக்கு இடையில் எழுந்த நெருக்கடி பற்றிய வழக்கு நடவடிக்கை ஒன்றிற்கு வழக்குக் கட்டணம் செலுத்தி மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிதியை விரயமாக செலவு செய்துள்ளது.

2015ஆம் ஆண்டில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அமுலானதோடு, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசாங்க கம்பனிகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டாலும் 2018ஆம் ஆண்டு வரைக்கும் கணக்காய்விற்கான வாய்ப்புக்களை வழங்கியிருக்கவில்லை.

மேலும், 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த இரண்டு கம்பனிகள் பற்றியும் கணக்கு அறிக்கைகள் எவையும் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் இந்த இரண்டு கம்பனிகளினதும் கணக்குகளைத் தயாரிப்பதற்காக தனியார் கணக்கியல் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆரம்ப காப்பாளரின் கருத்துக்கள்:- (பதவி வழியில் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சர்)

- இந்த இரண்டு நிறுவனங்களையும் கலைப்பதற்கான தேவை காணப்பட்டாலும் , அவ்வாறு செய்தால், அந்த இரண்டு நிறுவனங்களிலும் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம் பற்றி சரியான மதிப்பீடொன்றை பெறமுடியாது போகும் என்றும், இரு கம்பனிகளிலும் பணிப்பாளர் சபைக்காக மேலும் இரண்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நம்பிக்கைபொறுப்பு சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்,

அவ்வாறே, மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிதி, ஆபத்தான நிதி முதலீட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக நட்டம் அடைந்துள்ளது. திறமையான நிதி முகாமையாளர்கள் கம்பனியில் இன்மை இதற்கான காரணங்களாகியிருந்தன. ஆகையால், தற்போது பாதுகாப்பான முறையாக அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி நிறுவனங்கள் இரண்டான இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியோடு மாத்திரம் மஹபொல நம்பிக்கை நிதியத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறுகின்றன.

முழுமையாக நிதியத்தில் பொருத்தமான முதலீடுகளை மேற்கொண்டு, முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து நிதியத்தினை வலுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுத் திறைசேரிக்கு நிகழும் செலவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இவ்வாறான நிதியங்களை நிறுவியிருப்பதாக குழு வலியுறுத்தியது.

அவ்வாறே, இந்த நிதியத்தின் தலைவர் பதவி ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் வகிக்க வேண்டும் என சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டிருப்பது சுயாதீனமாகவும் வெளிப்படையாகவும் செயற்படுவதற்கு என்பதையும் சுட்டிக்காட்டப்பட்டது.

நல்லெண்ணத்தில் நிறுவப்பட்ட இந்த நிதியத்தை எதிர்காலத்தில் மிகவும் வெளிப்படையாக நிர்வகிப்பதற்குத் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களை எட்டுவதற்கு திட்டமிட்டுக் கொண்டிருப்பதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

<u>விதப்புரைகள்</u>

I. இது தொடர்பான முழுமையான தடயவியல் கணக்காய்வொன்றை மேற்கொண்டு, அந்த விதப்புரைகளின் பிரகாரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அல்லது இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அந்த அறிக்கையை சமர்ப்பித்தல்.

தடயவியல் கணக்காய்வினை மேற்கொள்வது குறித்து ஏற்கனவே நம்பிக்கை சபையினால் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும்,

வேலைப்பழு காரணமாக தேசிய கணக்ககாய்வு அலுவலகம் இந்த தடயவியல் கணக்காய்வினை மேற்கொள்ள முடியாது என குறிப்பிட்டமையால், தனியார் கணக்காய்வு கம்பனியின் ஊடாக இந்த தடயவியல் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக ஏற்கனவே கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

KPMG கம்பனி குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு குழு தெரிவித்தது.

விலைமனுக் கோருகையில், KPMG நிறுவனம் கரும்பட்டியலில் உள்ளடக்கப்படாமையினால், பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

3.2. <u>விதப்புரை இலக்கம் 11- இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் உரிமை</u>

இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (SLITT) உரிமையை வெளிப்படுத்தக்கூடிய, அமைச்சு மற்றும் நிதியத்திடம் காணப்படும் புதிய தகவல்கள் மற்றும் அது தொடர்பான அமைச்சின் அவதானிப்புக்களை ஒரு மாத காலப்பகுதிக்குள் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் செயலாளருக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவர்/ கணக்கீட்டு அலுவலரிற்கு விதந்துரைக்கப்பட்டிருந்ததோடு, அது தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சட்டத்தின் 5(ஈ) இன் கீழ் நோக்கமான “இளைஞர்கள் தங்களது தொழிற் திறன்கள் மற்றும் திறமைகளை மேம்படுத்தக்கூடிய வகையில் தொழிற் பயிற்சி நிறுவனங்களை நிறுவுதல்” எனும் நோக்கில் நம்பிக்கை நிதியத்தினதும் பொதுத் திறைசேரியினதும் நிதியைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில் நுட்ப நிறுவனம் (SLIIT) பிணையிலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டுள்ளது. பின்னர் இந்த கம்பனி

மஹபொல நம்பிக்கை நிதியத்தின் கட்டுப்பாட்டில் இருந்து படிப்படியாக வெளியேறி முழுமையாக தனியார் கம்பனியாக செயற்படுவதோடு, 2015.05.12 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மஹபொல நம்பிக்கை நிதியத்துடன் இருந்த பிணிப்புக்கள் நீக்கப்பட்டிருப்பதாக குழு சுட்டிக்காட்டியது.

அவ்வாறு நிதியத்திற்கு இருக்கும் உரிமையை நீக்கியிருப்பது SLITT நிறுவனம் தடுத்து வைத்திருந்த இலாபத்தில் ரூ.408 மில்லியன் தொகையை மஹபொல நிதியத்திற்கு வழங்கிய பின்னராகும்.

இதன் அனைத்து நடவடிக்கைகளும் 2015 சனவரி மாதத்தின் பின்னர் நிகழ்ந்திருப்பதோடு, 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையினால் இந்த தீரமானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, ரூ.408 மில்லியன் மேற்படி காசோலை அக்காலப்பகுதியில் நிதியத்தின் தலைமைத்துவத்தை வகித்த பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ அறையில் வைத்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு இந்த ஒப்பந்தத்திற்கு சாட்சிகளாக கையொப்பம் இட்டிருப்பது இரு அமைச்சர்கள் என்றும், (அக்காலப் பகுதியில் அமைச்சுப் பதவிகளை வகித்திருப்பது காமினி ஜயவிக்கிரம பெரேரா மற்றும் சரத் அமுனகம ஆகியோர் ஆகும்) தற்போது மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு SLIIT நிறுவனம் அமைந்துள்ள காணி மாத்திரமே உரித்தானது என மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

எனினும், சொத்துக்கள் பற்றி மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு உரிமையில்லை என்றும் சொத்துகளுக்கு உட்பிரவேசிக்கக்கூடியது SLIIT நிறுவனத்தின் அனுமதியோடு என்று சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக மஹபொல நம்பிக்கை நிதியத்தின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், 2017.05.28 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்திலும் இந்த நிறுவனத்தை தனியார் துறைக்கு சொந்தமாக்கிக் கொள்வதற்கான ஊழல் நிறைந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் குழுவிற்கு தெரியவந்தது.

நெட் வெல்த் சிக்கியூரிட்டீஸ் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டதானது:

அரசாங்க நிறுவனமாக நல்லெண்ணத்தில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் அதிக பேராசையினால் இவ்வாறு அரசாங்க உத்தியோகத்தர்களை தனது கட்டுப்பாட்டில் இருந்து இழந்துள்ளதாகவும் தற்போது தான் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மூவரையும் பணிப்பாளர் சபையில் இருந்து நீக்கியுள்ளதாகவும் தெரவித்தார்.

2019 இற்கு பின்னர் கடந்த காலப்பகுதியிலும் 2025 சனவரி மாதத்திலிருந்து இதுவரையில் இந்த நடவடிக்கைகள் குறித்து

புதிய நம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் குழு வினவியது.

விஜயதாச ராஜபக்ஷ, பந்துல குணவர்தன மற்றும் மீண்டும் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் நலீன் பிரனாந்து ஆகிய அமைச்சர்களால் மூன்று சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அனுப்பியிருப்பதாகவும் 2022ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தை மீண்டும் 2015ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலைக்கு மாற்றுமாறு அமைச்சரவைத் தீர்மானமொன்றை பெற்றுக்கொண்டாலும் அதன்போது சட்டமா அதிபரின் கருத்தை அறியுமாறும் நிபந்தனையொன்று குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், 2023 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2022ஆம் ஆண்டு எட்டப்பட்ட அமைச்சரவை தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் 2023 ஆண்டில் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு தற்போதைய நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு நடவடிக்கைளை மேற்கொள்ள நேர்ந்திருப்பதாகவும் 2022 ஆம் ஆண்டில் உபாலி அபேரத்ன குழுவில் ஸ்ரீபவன் அவர்களின் விளக்கத்தின் ஊடாக

உண்மை சம்பவம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் குழு அவதானித்தது.

விதப்புரைகள்

I. இந்த நிறுவனத்தை தனியார் துறைக்கு சொந்தமாக்குவதற்கான வேலைத்திட்டத்தில் பாரிய ஊழல் இடம்பெற்றிருப்பதனால், முழுமையான அதிகாரத்தைக் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமித்து, இது தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கும், அதனூடாக வெளிப்படுத்தப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ள மோசடி குறித்து தண்டனைகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை (SLITT) மஹபொல நம்பிக்கை நிதியத்தின் துணை நிறுவனமாக மீண்டும் நியமிப்பதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

III. இந்த நிறுவனத்தை மீண்டும் நிதியத்திற்கு சொந்தமாக்கிக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள விதப்புரைகளை பின்பற்றி மீள் பரிசீலனை செய்ய வேண்டுமானால், அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கு கோரிக்கையொன்றை வைத்தல்.

IV. இந்த நிறுவனத்தை கையளிப்பது தொடர்பான தீர்மானத்தை மீண்டும் மீளாய்வு செய்ய வேண்டுமாயின், அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அதனை மேற்கொள்வது குறித்து கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவதும் அதற்கான பொறுப்பினை பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் வகித்தலும்.

இந்த கலந்துரையாடலின் நோக்கமாவது SLITT நிறுவனத்தின் உரிமையை மீண்டும் மஹபொல நம்பிக்கை பொறுப்பு சபையின் கீழ் கொண்டுவருவது மாத்திரம் என்றும் அதன் கல்வி

நடவடிக்கைக்கு அல்லது பாடநெறிகளுக்கு தடையேற்படுத்துவது நோக்கமல்ல என்றும் மஹபொல நிதியத்தின் நோக்கங்களுக்கு இவற்றை கொண்டுவருவதற்கு எதிர்ப்பார்ப்பதன் மூலம் நாட்டின் பிள்ளைகளுக்கு நியாயத்தை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதனையும் குழு உறுதியாக வலியுறுத்தியதோடு, அதனை ஆரம்ப காப்பாளரும் உறுதிப்படுத்தினார்.

இடம்பெற்றுள்ள தவறை அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக நிவர்த்தி செய்வதற்கு தற்கால அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பார்ப்பதாக ஆரம்ப காப்பாளர் தெரிவித்தார்.

இதன்போது, கணக்காய்வு நடவடிக்கைகளை பலப்படுத்துவது மற்றும் செயல்திறன் கணக்காய்வின் (performance Audit) அவசியம் குறித்து குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

3.3 <u>விதப்புரை இல 09</u>

<u>நிகழ் நிலை லொத்தரை மீள நடைமுறைப்படுத்தல் - 2021</u>

நிகழ் நிலை லொத்தருக்காக தெரிவு செய்யப்பட்ட லொத்தர்தாரர் அதிலிருந்து விலகிய காரணத்தால் லொத்தர் செயற்பாடுகள் முடங்கியிருந்தன.

2021 அக்டோபர் 18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் அனுமதியோடு நிகழ்
நிலை லொத்தரை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு

ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும், பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் பொருத்தமான முதலீட்டாளரை தெரிவு செய்து, அதற்காக நம்பிக்கை பொறுப்புச் சபையின் அனுமதியினையும் பெற்றிருந்ததோடு, ஒப்பந்தத்தின் வரைவிற்காக அந்த விலைமனு கோரிக்கையாளர் இணங்கியிருந்தார். மேலும், சட்டத்துறை தலைமை அதிபதியின் அனுமதியும் அதற்கு கிடைத்திருந்தது.

இருப்பினும், இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட முதலீட்டாளர் 10%-15% வரையிலும் நிலையான அரச பங்கினை ரூபா 100-200 மில்லியன் வரையிலும் திருத்தம் செய்வதற்கு இணங்கியிருந்தாலும், மற்றுமொரு முதலீட்டாளரிடமிருந்து குறைந்த பெறுகையொன்று கிடைத்திருப்பதனால், முதலாவது தெரிவு செய்த முதலீட்டாளரின் தெரிவினை இரத்துச் செய்வதாக அறிவித்திருப்பதாகவும் மேலும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்த புதிய முதலீட்டாளரை தெரிவு செய்வதற்கு தொழில்நுட்ப குழுவின் விதப்புரைகளும் அமைச்சரவை பெறுகைக் குழுவின் விதப்புரைகளும் கிடைத்திருப்பதாகவும், விலைகளை கலந்துரையாடி இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு அறிவித்துள்ளதாகவும் மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

தொழில்நுட்ப குழுவின் விதப்புரைகளின் பிரகாரம், Substantially responsive highest bidder இற்கு இந்த பெறுகையை வழங்குமாறு தீர்மானிக்கப்பட்டதாகவும், அமைச்சரவை பெறுகை குழுவிடமிருந்து Genlot Game Technologies நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாகவும், விலைகளை கலந்துரையாடி இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

<u>விதப்புரைகள்</u>

I. இது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. அதற்காக மேலதிக தகவல்கள் தேவையாயின், அவற்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

04. <u>2022 மற்றும் 2023 வரையான ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளிலிருந்து வெளிக்கொண்டுவரப்பட்ட விடயங்கள் மற்றும் தற்போதைய நிலைமை</u>

4.1 <u>மஹபொல புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதியுள்ள மாணவர்களை தெரிவு செய்தல் மற்றும் மஹபொல புலமைப் பரிசில் கொடுப்பனவு காலத்தில் இடம்பெறும் தாமதங்களைகக் குறைத்துக் கொள்ளல்.</u>

பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மற்றும் புலமைப் பரிசில் ஒன்றை பெறுவதற்கு தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் மஹபொல புலமைப் பரிசிலை வழங்குவதனை நோக்காகக் கொண்டிருந்தாலும், பெற்றோரால் ஈட்டப்படும் வருடாந்த வருமானம் ரூ.500 000 இற்கு குறைவாக இருக்க வேண்டும் என்ற அளவுகோளை அடிப்படையாகக் கொண்டிருப்பதன் காரணமாக 2020/2021 மற்றும் 2021/2022 கல்வி ஆண்டுகளில் புலமைப் பரிசிலை பெறுவதற்கு தகுதியுள்ள மாணவர்கள் முறையே 20,000 மற்றும்

26,000 இடையில் மாணவர்கள் 15,000 மற்றும் 16,000 அளவில், அதாவது 75 % மற்றும் 61.5% அளவான மாணவர்களுக்கு மாத்திரம் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

மஹபொல புலமைப்பரிசிலை வழங்குவதற்கு தகுதியுள்ள மாணவர்களை தெரிவு செய்தலானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக இடம்பெறுகிறது.

நிதியத்திடம் காணப்படும் கையிருப்பை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் புலமைப் பரிசில்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு, புலமைப் பரிசிலை வழங்கக்கூடிய உயர்ந்த பட்ச மாணவர்களின் எண்ணிக்கைக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுவதாகவும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு மேலதிகமாக மேலும் கல்வி நிலையங்கள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளிலுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை வழங்குவதாகவும் மாதாந்தம் அண்ணளவாக 70,000-80,000 அளவான மாணவர்களுக்கு புலமைப் பரிசிலை வழங்குவதாகவும் குழுவில் தெரிய வந்தது.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக புலமைப்பரிசில்களை வழங்கும்போது, புதுப்பிக்கப்பட்ட தரவுத் தொகுதியொன்று காணப்படுவதன் முக்கியத்துவம் இங்கு வலியுறுத்தப்பட்டது.

விதப்புரைகள்

I. மாணவர்களின் எண்ணிக்கை மாறுபடுதல், கொடுப்பனவு காலத்தில் நிகழும் தாமதங்கள் குறித்து கவனத்தை செலுத்தி மஹபொல கொடுப்பனவு பொறிமுறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் புலமைப் பரிசிலை பெறுவதற்கு தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் புலமைப் பரிசிலை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

II. அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய தொகையை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4.2 மஹபொல வர்த்தகக் கண்காட்சி

நிதியைத் திரட்டும் நோக்கில் 2023 டிசம்பர் 13 முதல் 17 வரை ஜ - எல நகர சபை மைதானத்தில் மஹபொல வர்த்தகக் கண்காட்சி நடத்தப்பட்டது. அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வருமான அறிக்கையின் பிரகாரம், குறித்த கண்காட்சியின் மூலம் ரூ. 2,9046,884 நட்டம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் கணக்காய்வின் மூலமே தெரியவந்துள்ளதாகவும், நம்பிக்கை பொறுப்புச் சபையின் தீர்மானத்திற்கு அமைய வர்த்தகக் கண்காட்சி செயலகத்திடம் பணம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வர்த்தகக் கண்காட்சி செயலகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகவும் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

மேலும், குறித்த வர்த்தகக் கண்காட்சி செயலகத்தின் வங்கிக் கணக்கை அணுகுவதற்கு நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு இயலாது

என்பதோடு, நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அனுமதியுடன் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (CID) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதும் தெரியவந்தது.

அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தும் நோக்கத்தில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என குழு வலியுறுத்தியது. அத்துடன், இந்த கண்காட்சி கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியாக நடத்தப்பட்டதாகவும் அதன்போது பொறுப்புகள் பல்வேறு குழுக்களுக்கு இடையே எவ்வாறு பகிரப்பட்டன என்பது குறித்த தகவல்களும் இதன்போது வெளிப்படுத்தப்பட்டன.

<u>விதப்புரை</u>

i. தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளும்போது இந்த விடயத்தையும் அதில் உள்வாங்கி, இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த தகவல்களைச் சமர்ப்பித்தல்.

4.3 <u>2023 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல்</u>

2023 ஆம் ஆண்டில், இரண்டு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 05 வர்த்தகக் கண்காட்சி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கும் 03 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததோடு, இவர்களது நியமனங்களின் சட்டப்பூர்வத்தன்மை, ஆட்சேர்ப்பு செயல்முறை, கொடுப்பனவுகளைத் தீர்மானித்த அடிப்படை, கடமைகளை ஒப்படைத்தல், கடமைக்கு அறிக்கையிடும் இடங்கள், நேரடி மேற்பார்வை உத்தியோகத்தர் மற்றும் கடமைகளை நிறைவேற்றியமை தொடர்பான ஏற்றுக்கொள்ளத்தக்க எழுத்துப்பூர்வ ஆதாரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இருப்பினும், குறித்த உத்தியோகத்தர்களுக்கு 2023 யூலை முதல் 2024 பெப்ரவரி வரையிலான காலப்பகுதிக்காக ரூ. 1,920,833 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக நிதியத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

பணியாட்டொகுதியை உள்ளீர்ப்பதற்கான கடிதங்கள் மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்படவில்லை என்பது இதன்போது வெளிப்படுத்தப்பட்டது.

குழுவின் விதப்புரை

i. தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளும்போது இந்த விடயத்தையும் அதில் உள்வாங்குதல்.

4.4 மில்லேவ தோட்டக் காணி

முன்மொழியப்பட்ட சர்வதேச பல்கலைக்கழக கிராமத்தை நிர்மாணிப்பதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ஹொரண, மில்லேவ தோட்டக் காணிக்காக மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் அண்ணளவாக 200 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாக 2 பில்லியன் ரூபாயைச் செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை நிதியத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான நிதி வசதி நிதியத்திடம் இல்லை என்பதோடு, அந்த முதலீடு நிதியத்திற்குப் பாதகமானது என்பதால், ஏற்கனவே செலுத்திய பணத்தைத் மீளப் பெற்றுக்கொண்டு காணியை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமே ஒப்படைப்பது குறித்து அவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

இந்தக் காணியின் உரிமை பாதுக்க பிரதேச செயலாளருக்கு உள்ளது என்பதும், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு இக்காணி தொடர்பாக எவ்வித உரிமையும் இல்லை என்பதோடு, அவ்வாறு உரிமை உறுதிப்படுத்தப்படாத காணி ஒன்றிற்காக மஹபொல நம்பிக்கை நிதியம் பணத்தைச் செலுத்தியுள்ளது என்பதும் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

குழுவின் விதப்புரைகள்

i. தடயவியல் கணக்காய்விற்காக இந்த விடயத்தையும் உள்வாங்குதல்.